[21st November 1963

இண்டர் கம்யூனிகேஷன், அதாவது ஒரு வண்டியிலிருந்து மற்றெரு வண்டிக்கு அல்லது ஒரு வண்டியிலிருந்து அவர்களுடைய ஹெட் ஆபீஸிற்கு பேசக்கூடிய வயர்லெஸ் வசதி, மற்றவைகளெல்லாம் செய்து யார் டாக்ஸி நடத்துவதற்கு முன்வந்தாலும், அவர்களுக்கு அதிகமாக சலுகை கொடுப்பது என்பது முடிவு. ஓனர் டிரைவராக இருந்தால் அவர்களுக்குக் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறோம்.

திரு. கே. மூக்கையா தேவர் : இருக்கிற வசதியோடு குறைந்த கட்டணத்தில் ஆடோரிக்ஷாவில் ஏழை மக்கள் போவதற்கு வசதியாக இருக்கிறது. இப்பொழுது இருக்கிற ஆட்டோ ரிக்ஷாக்கள் ரொம்ப ஆபத்தாக இருக்குமாதலால் டெல்லி போன்ற மற்ற இடங்களில் இருப்பதுபோல் பெரிய வீல் போட்டு, 2, 3 பேர்கள் ஏறிக்கொள்வதற்கு வசதியான ஆடோரிக்ஷாக்கள் ஓடும்படி செய்வதற்கு அரசினருக்கு உத்தேசம் உண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : டெல்லியில் ஆடோரிக்ஷாக்களைக் கொஞ்சம் கொஞ்சமாக நீக்குவதற்கு முடிவு செய்திருக்கிறார்கள். அந்த வண்டிகள் பழையதாகப் போனவுடன் நிறுத்தி விடுவார்கள். பம்பாயில் நீக்கிவிட்டார்கள். இதனால் டிராபிக் ஆக்ஸிடென்ட்ஸ் அதிகமாக ஏற்படுகிறது. ஆகவே, இதை நீடித்து நடத்துவதற்கு உத்தேசமில்லை.

திரு. கே. மூக்கையா தேவர் : இம்மாதிரி ஃப்ளீட் டாக்ஸிகளுக்கு லைசென்ஸ் வழங்குவதற்கு முடிவு செய்திருப்பதன் முக்கிய நோக்கம், ஏற்கெனவே இருக்கிற டாக்ஸிகாரர்கள் அடிக்கடி ஸ்ட்ரைக் செய்கிறார்கள், அதனால் பலவிதமான கஷ்டங்கள் ஏற்படுகின்றன: ஆகவே அதற்கு மாற்று முறையாக இந்த ஏற்பாட்டைச் செய்திருக்கிறார்கள் என்ற வதந்தி இருக்கிறதே? அது உண்மையா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : வதந்திகள் எத்தனையோ கிளம்புகின்றன. ஆனால், எபிஷியண்டு ஸர்வீஸ் இருக்கவேண்டும் என்பதற்காகத்தான் இந்த முறை அனுஷ்டிக்கப்படுகிறது.

Political sufferers

* 367 *Q.*—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the amount of lump-sum cash grants, land grants and life pensions under the scheme for relief and rehabilitation of political sufferers in Madras State in 1962–63; and

(*b*) the basis of distribution of these amounts?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) A total sum of Rs. 13,800 was granted as financial assistance from the Union Home Minister's Discretionary Grant to 40 political sufferers in Madras State during 1962-63. There are no schemes for assignment of land to political sufferers and for the grant of life pension.

21st November 1963]

(b) Financial assistance is granted by the Government of India from the Union Home Minister's Discretionary Grant. The grant is recommended taking into account the period of imprisonment undergone by the Political Sufferer during the freedom struggle and his present financial position.

SRI M. S. SELVARAJAN : Are the Government aware that the disposal of applications for grant of financial aid to political sufferers is much delayed? If so, what is the reason for the same? Will any speedy action be taken in this regard?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I may inform the hon. Member that there was no avoidable delay. If the application is received, it has to be verified whether the applicant comes under the category of political sufferer and whether he deserves any gratuity or aid.

திரு. கரு. சீமைச்சாமி : கட்சி மாறிய அரசியல் தியாகிகளுக்கும் இந்தச் சலுகை உண்டா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கட்சி மாறிய அரசியல் தியாகிகளுக்குச் சலுகை கொடுப்பதற்குத் தடை ஒன்றுமில்லை இந்த விதிகளின்படி.

திரு. ஜே. மாதா கவுடர் : அரசியல் தியாகிகள் எல்லோருக்கும் நிலம் கொடுத்து உதவவேண்டும் என்பது தான் ஆரம்பத்தில் சர்க்கார் கொள்கையாக இருந்தது. பாதிப் பேர்களுக்கு நிலம் கொடுத்த பிறகு, ராஜாஜி மந்திரி சபையினுல் இது நிறுத்தப்பட்டு விட்டது. பாதிப் பேர்கள் உண்மையாகவே தியாகிகளாக இருக்கும் காரணத்தினுல், அவர்களுக்கு நிலம் கொடுப்பது பற்றி சர்க்கார் மறு பரிசிலனை செய்யுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : 11 ஆண்டுகளுக்கு முன்பு முடிவு செய்யப்பட்ட விஷயத்தை மீண்டும் எடுத்துக்கொள்வதாக இல்லை. அப்படி எடுத்துக்கொண்டாலும், கொடுப்பதற்கு நிலம் இல்லை.

தேசிய பாதுகாப்பு நிதி

* 370 கேள்வி.—திரு. முனு. ஆதி : கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா— 9-30 a.m.

தேசிய பாதுகாப்பு நிதிக்கு தமிழ்நாடு அரசாங்க ஊழியர்கள் அவர்களது மாத சம்பளத்தில் ஒரு நாள் ஊதியத்தை அளித்துவிட வேண்டும் என கட்டாயப்படுத்தப்பட்டனரா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No Sir.

திரு. முனு. ஆதி : அப்படி ஏதேனும் புகார் வந்திருக்கிறதா? இப்பொழுதும் பாதுகாப்பு நிதிக்கு வசூல் செய்து கொண்டிருக்கிறார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அப்படி ஒன்றும் புகார் வரவில்லை.